# கருணாலயம்



வடலியடைப்பை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட
உயர் சைவ வேளாண்குல

# அமரர் நடராசா கருணாகரன்

## அவர்களின் சிவபதப் பேறு குறித்த


## நினைவு மலர்

**07-09-2013**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



வடலியடைப்பை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட
உயர் சைவ வேளாண்குல

# அமரர்

# நடராசா கருணாகரன்

## அவர்களின் சிவபதப் பேறு குறித்த

# கருணாலய மலர்

## 07-09-2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமர்ப்பணம்

வையகத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து எங்கள் உயர் வாழ்விற்கு ஊன்று கோலாகவும் வழிகாட்டியாகவும் எமைக் காத்து நின்ற கருணைக் கடல், இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட எமது குடும்ப விளக்கின் பாதங்களில் "கருணாலயம்" என்னும் நினைவு மலரினை சூட்டி காணிக்கை ஆக்குகின்றோம்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பஞ்ச புராணம்

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

## திருவாசகம்

போற்றியோ நமச்சிவாய புயங்களே மயங்குகின்றேன்
போற்றியோ நமச்சிவாய புகல் இடம் பிறிது ஒன்றில்லை
போற்றியோ நமச்சிவாய புறம் எனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சிவாய சயசய போற்றி போற்றி.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவர் தன்னைக் கண்டு கண்(டு) உள்ளங்
குளிர என் கண்கள் குளிர்ந்தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்.
பெற்றதார் பெறுவார் உலகில்?
ஊரும் உலகுங் கழற
உளறி உமைமண வாளனுக்காட்
பாரும்விசும்பும் அறியும்
பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டு நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க வென்றார்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமற் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வைய நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாம் தழைத்தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் நடராசா கருணாகரன் அவர்களின் வாழ்க்கைச் சுவடுகள்

இந்து மகா சமுத்திரத்தின் இணையற்ற முத்து என ஒளி தரும் ஈழத்தீவின் வட சிகரமென விழங்கும் யாழ் குடாநாட்டின் மேற்கு பக்கமாக கோவில் கொண்டுள்ள அருள்மிகு புதறானை ஸ்ரீ சித்தி விநாயக பெருமானின் திருவுடையினால் சைவமும் தமிழும் தளைத்தோங்க இயற்கை அழகும், நீர்வளம் நிரம்பியதும் நெல் மணிகள் கொழிக்கும் கமபுல செல்வர்களும், கல்வி கற்றோரும் வாழ் கிராமம் வடலியடைப்பு.

இவ் ஊரில் சீரும் சிறப்புமாக உயர் சைவ வேளாண்குல சிவநெறிச் செம்மல் இராமலிங்கம் நாகலிங்கம் என்பவர் மலேசியாவில் அரச கட்டட படவரைஞராக கடமையாற்றினார். இவர் மக்கள் எல்லோராலும் "மேல் வீட்டு நாகலிங்கம்" என கௌரவமாக அழைக்கப்பட்டார்.

அமரர் நாகலிங்கம் இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடாத்தி வந்ததன் பயனாக சிவபாக்கியம், தில்லைநாயகம், ஞானம்மா, நடராசா, சொக்கலிங்கம், தியாகராசா எனும் மக்கட் செல்வங்களைப் பெற்று வாழ்க்கை நடாத்தினார்.

இவரது புதல்வர்களுள் நடராசா என்பவர் தனது சொந்த ஊரான வடலியடைப்பில் " எலக்றிக் ஸ்ரூடியோ" என்னும் புகைப்பட கலையகத்தை ஸ்தாபித்து நடாத்தி வரும் வேளையில் இவருக்கு திருமணம் செய்ய முடிவு செய்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாருதப்புரவீக வல்லியின் புகழ் பாடும் மாவைக்கந்தன் அருளால் நிலவளமும், செழிப்பும் நிறைந்த மாவிட்டபுரம் என்னும் ஊரில் பிறந்து மலேசியாவில் அரச சேவையில் பிரதம லிகிதராக கடமையாற்றிய வைரவநாதன் காசிப்பிள்ளை என்பவரின் மூத்த புதல்வியாம் கனகம்மா என்னும் குணவதியை திருமணம் என்னும் பந்தத்தில் இணைத்து இல் வாழ்வின் துணைவியாக ஏற்று இல்லறம் இனிது காட்டி இசைபாடி இணைந்து வாழும் காலத்தில் "மங்களம் என்பது மனைமாட்சி" என்னும் வாக்குக்கிணங்க சரோஜினிதேவி, சுலோசனாதேவி, கருணாகரன், மீராதேவி ஆகிய நல் மக்களைப் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்க்கை நடாத்தி வந்தார்.

அமரர் நடராசா அவர்களின் ஏக புத்திரன் கருணாகரன் 10.11.1952 இல் வடலியடைப்பில் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை யா/வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியை யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியிலும், உயர் கல்வியினை யா/விக்ரோரியா கல்லூரி சுழிபுரத்திலும் ,கல்வி கற்றார். இவர் மாணவப் பருவத்தில் கணிதத்துறை, கலை, விளையாட்டு, கருத்தரங்கு என்பவற்றில் சிறந்து விளங்கினார்.

அமரர் நடராசா கருணாகரன் அவர்கள் தொழில் வாய்ப்பு பெறும் நோக்கில் யாழ்ப்பாணம் தொழில் நுட்பக்கல்லூரியில் கட்டட பட வரைஞர் (Draughtsman) கற்கை நெறியில் கல்வி கற்று சான்றிதழைப் பெற்று 15.03.1977 இல் பண்டாரவளையில் கட்டட வேலைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் கட்டட பட வரைஞராக (Draughtsman) நியமனம் பெற்று அரச சேவையில் காலடி எடுத்து வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் 1977ம், 1983ம், ஆண்டு காலப்பகுதிகளில் நாட்டில் ஏற்பட்ட இனக்கலவர காலத்திலும் பண்டாரவளை, பதுளை ஆகிய இடங்களில் பல இன்னல்களுக்கு மத்தியிலும் சேவையாற்றினார்.

அமரர் நடராசா கருணாகரன் மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்று சிறந்து விளங்கியதுடன் அரச தாபனக்கோவை,(Establishment Code) பொதுச் சுற்றறிக்கைகள் (General Circulars) என்பவற்றில் பூரண அறிவைக் கொண்டிருந்ததுடன் இது சம்மந்தமாக ஏனையோர்களுக்கு விளக்கமளிப்பதுடன் ஆலோசனை வழங்குவதிலும் முன்னிலை வகிப்பவராக காணப்பட்டதோடு தனது சேவையில் கடமை உணர்வுடனும், அர்ப்பணிப்புடனும், கண்ணியமாகவும் 35 வருடங்கள் சேவையாற்றினார்.

இவர் அரச பணியில் மட்டுமல்லாது சமூக பொது நல் சேவைகளிலும், அவற்றின் வளர்ச்சியிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

அமரர் கருணாகரன் உற்றார், உறவினர், நண்பர்கள், சக உத்தியோகத்தர்கள் என அனைவருடனும் அன்பாகவும், பண்பாகவும், பழகினாலும் தவறுகள், பிழைகள் எனத் தெரிந்தால் அவற்றைச் சுட்டிக்காட்டி நேருக்கு நேராகப் பேசுவதிலும் அவருக்கு நிகர் அவரே.

அமரர் நடராசா கருணாகரன் அவர்கள் தனது சகோதரிகளின் பிள்ளைகளான செந்தூரன், சுபாகரன், சுதர்சினி, முகுந்தன், கரன், ஆகிய மருமக்களது கல்வி வளர்ச்சியில் அதீத ஈடுபாடு கொண்டு அவர்களை நல்நிலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தி அனைவரும் அரச சேவையில் இணைந்து சேவையாற்றுவதைக் கண்டு மனம் மகிழ்வுற்றார்.

முதுமையடையும் வேளையில் நோய் வாய்ப்படுவது மனித இயல்பு. இதற்கிணங்க நீரிழிவு நோய்க்குட்பட்டு மருத்துவ சிகிச்சை பெற்றுவரும் வேளையில் நெஞ்சு சளி காரணமாக ஆடி அமாவாசை அன்று யாழ் போதனா வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு இரண்டு நாட்களாக சிகிச்சை பெற்று வரும் வேளையில் மூச்சுத்திணறல் காரணமாக 08.08.2013 அன்று காலை 6.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக..

# ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணியமான கடமை வீரனே

# கருணா

எமது பிரதேச செயலகத்தின் தொழில் நுட்ப உத்தியோகத்தரான அமரர் நடராஜா கருணாகரன் அவர்களின் திடீர் மறைவு பேரிழப்பாகும். அவரது பிரிவு பிரதேச செயலக ஊழியர்கள் அனைவரினதும் மனதில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

யாழ்ப்பாணத்தின் அதி சிறப்புத் தரத்திலுள்ள தொழில் நுட்ப உத்தியோகத்தர் மிகச் சிலரில் இவரும் ஒருவராவார். பழகுவதற்கு இனிமையான இவர் கடமை, கண்ணியம் கட்டுப்பாட்டுடன் சேவையாற்றி மக்கள் மனதினைக் கவர்ந்தவர். ஏற்றத்தாழ்வின்றி இன்முகத்துடன் பலரையும் கண்டு அளவளாவி தன்னாலான பல உதவிகள் செய்து யாவரது நன்மதிப்பையும் அன்பையும் தன்பால் ஈர்த்தவர். இதன் மூலம் சிறந்த சமூக சேவையாளராக சமூகத்தின் மத்தியில் சிறந்த நன்மதிப்பினைப் பெற்றிருந்தமை கண்கூடாகக் காணக்கூடியதாக இருந்தது.

இவ்வாறாகத் தனது சேவைக்காலத்தில் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களைச் சிறப்பாக நெறிப்படுத்தி பலதரப்பட்ட நிகழ்வுகளிலும் முன்னின்று உழைப்பவராக எம்மத்தியில் வாழ்ந்து வந்தார்.

பிரிவுகள் நினைவுகளை மீட்கும் ஆற்றல் வாய்ந்தவை. தங்கள் பெரும் பிரிவு எங்கள் உள்ளங்களிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணங்களாய் தங்களின் அர்ப்பணிப்பையும் அதி சிறந்த சேவையையும் அசை போடச் செய்கின்றன. ஒவ்வொரு அலுவலர்களினதும் சுகதுக்கங்களிலும் தவறாது கலந்து கொள்ளும் பாங்கினர்.

*"நெருனல் உளன் ஒருவன் இன்றில்லை எனும்*

*பெருமை உடைத்து இவ்வுலகு"*

நேற்று இருந்த ஒருவர் இன்றில்லை என்ற நிலையாமையை மேற்கூறிய குறளின் மூலம் அறிவுறுத்துகின்றார் திருவள்ளுவர். பிறப்பவர் அனைவரும் இறப்பது நியதி என்ற அடிப்படையில் அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி அமரர் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி நல்வாழ்வு வாழ இறைவன் அருள் வேண்டிப் பிரார்த்திப்போமாக.

***ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி!!!***

பிரதேச செயலர்
வலி தெற்கு பிரதேச செயலகம்
உடுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரங்கல் உரை

### கருணாகரன்(தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

அரசாங்க சேவையிலே துணிச்சல் மிக்க வீரனாய் கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன் எடுத்த கருமங்களை வேளை நேரம் பாராது அயராது செய்து முடிப்பதில் செயல் வீரனாய் செயற்பட்ட உடுவில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் கருணாகரன் இறந்த செய்தி கேட்டது எமக்கெல்லாம் ஓர் அதிர்ச்சி

எடுத்த கருமங்களையும் கொடுத்த வேலையையும் பின் நிற்காது தன் முழு நேரத்தையும் முழுத் திறமையையும் பயன்படுத்தி உயரதிகாரிகளுக்கு மதிப்பளித்து சிறப்பான சேவையை இறக்கும் வரை ஆற்றிய கருணாகரன் தொழில் நுட்ப உத்தியோகத்தரையும் அவரது சேவையையும் நாம் என்றுமே மறக்கமுடியாது.

உடுவில் பிரதேச செயலகத்திலே நான் பிரதேச செயலராக இருந்த காலத்தில் புதிய கட்டிடம் அமைத்து முடிப்பதில் முழுப் பக்கபலமாகவும் தொழில்நுட்ப வழிகாட்டியாகவும் நின்று எம்மோடு அவர் ஆற்றிய பணிகளை நான் இன்றும் நினைவு கூறுகின்றேன்.

மேலும் தன் சக உத்தியோகத்தருடன் பழகுகையில் கூட வார்த்தையில் கண்ணியமும் அன்பும் காட்டி தற்பெருமை சிறிதும் இன்றி எல்லோரது தேவைகளையும் கூட நிறைவு செய்ததை நாம் அவதானிக்கலாம்.

இறப்பின் இறுதிவரை சேவையாற்றி தம் சகோதரர்களுக்கும் குடும்பத்திற்கும் வழிகாட்டியாக விளங்கிய இவ் உத்தியோகத்தரின் இழப்பை இட்டு துயருறுவதுடன் மேலும் இவரின் பிரிவால் துயருறும் இவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

திருமதி.ச.மஞ்சுளாதேவி
பிரதேச செயலர்,
வேலணை.

MANCHULADEVI SATHEESAN
DIVISIONAL SECRETARY
ISLAND SOUTH, VELANAI



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடுவில் பிரதேச செயலக நலன்புரிச்சங்கத்தால் அமரர்.நடராசா கருணாகரனின் சேவையினை கௌரவிக்கும் முகமாக வழங்கிய சேவைநலன் பாராட்டு வாழ்த்து மடலில் இருந்து......**

## திரு. நடராசா கருணாகரன்

## தொழில் நுட்ப உத்தியோகத்தர் - (அதிசிறப்பு)

## சேவை விபரம்

| | |
|---|---|
| 15.03.1977 – 31.03.1978 - | கட்டட வேலைகள் பணிப்பாளர் அலுவலகம், பண்டாரவளை |
| 01.04.1978 – 12.09.1984 – | பிரதம பொறியியலாளர் அலுவலகம் பொருந் தெருக்கள் திணைக்களம் பண்டாரவளை |
| 13.09.1984 – 15.12.1985 – | பிரதம பொறியியலாளர் அலுவலகம் பொருந் தெருக்கள் திணைக்களம், மன்னார். |
| 16.12.1985 – 23.03.1988 - | கட்டட பணிப்பாளர் அலுவலகம்,கட்டட திணைக்களம்,பத்தரமுல்ல |
| 24.03.1988 - 31.12.1989 - | உதவி ஆணையாளர் அலுவலகம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சித் திணைக்களம்,

சிலாபம்

01.01.1990 -31.04.1995 - உதவி ஆணையாளர் அலுவலகம்

உள்ளூராட்சித் திணைக்களம்,

கிளிநொச்சி.

01.05.1995 – 31.10.2000 - பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்

01.11.2000 – 23.05.2007 - பிரதேச செயலகம், வேலணை

24.05.2007 – 09.11.2012 - பிரதேச செயலகம், உடுவில்

அரச சேவையில்35 வருடங்கள் கடமையுணர்வுடனும்,கண்ணியத்துடனும், அர்ப்பணிப்புடனும் சேவையாற்றினார்.

**வாழ்த்தி வழங்கும்...**

பிரதேச செயலக நலன்புரிச் சங்கம்

பிரதேச செயலகம் , உடுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடராசா கருணாகரன் - சமூக சேவையாளன்

வடமாகாணம் வலி தென்மேற்கு, வடலியடைப்பு கிராமத்தில் இற்றைக்கு அரை நூற்றாண்டு காலத்திற்கு முற்பகுதியில் புகைப்படத் தொழில் நுட்பத்தை (Electric Studio) நடாத்தி வந்த நடராசா அக்காலப்பகுதியில் பண்டத்தரிப்பு பிரதேசத்தில் ஒரு தொழில்சார் வல்லுனராக கருதப்பட்டார். அக்காலப் பகுதியிலேயே நாமும் பரீட்சைக்கு தோற்றுவதற்காக முதன்முதலில் படம் பிடித்தோம் எனக்குறிப்பிடலாம். இத்தொழில் வல்லுனரின் நான்கு பிள்ளைகளில் ஏக புத்திரனாகிய அமரர் கருணாகரன் யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் எமது முன்னிலை மாணவனாகக் கல்வி கற்றார்.

இவர் கல்வி கற்கும் காலங்களில் சிறந்த விளையாட்டு வீரனாகவும் கணிதத் துறையில் ஆழ்ந்த அறிவுள்ளவராகவும் காணப்பட்டார். இதனால் பாடசாலைக்கு நல்ல பெறுபேறுகளையும் பெற்றுக் கொடுத்தார்.

தொடர்ந்து தொழிநுட்பம் சார் கல்வியினை மேற்கொண்டு தொழில் நுட்பவியலாளராக அரச சேவையில் இணைந்து சம்பளம் பெறுவதோடு நின்று விடாமல் சமூகசேவையிலும் இணைந்து மக்களுக்கு சேவையாற்றி வந்தார். இக்காலப் பகுதியில் கிராமத்திலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களுடன் இணைந்து செயற்பட்டதோடு கூட்டுறவுத் துறையிலும் ஈடுபாடு கொண்டு வடலியடைப்பு கிளை 11 இல் நிர்வாக சபை உறுப்பினராக கடமையாற்றி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது சேவையின் தரத்தை அறிந்து, 1996/1997 காலப் பகுதியில் இருந்த கூட்டுறவுப் பிரதி ஆணையாளர், பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பணிப்பாளர் சபையின் ஒரு உறுப்பினராக இவரை நியமனம் செய்தார். இதனூடாக எமது சங்கத்தின் நிர்வாகியாக மாத்திரமல்லாமல் அப்போதைய காலப்பகுதியில் இங்கு மேற்கொள்ளப்பட்ட கட்டட வேலைகளில் தனது தொழில் நுட்ப பங்களிப்பினை வழங்கினார். இதற்காக எமது சங்கம் அவருக்கு நன்றி கூற கடமைப் பட்டதாகும்.

அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற காலத்தில் கிராம நிறுவனங்களின் ஊடாக பல சேவைகளைச் செய்ய ஆர்வமாக இருந்தும் உடல் நிலை பாதிப்பு காரணமாக எண்ணிய பணியினைத் தொடர முடியாது போய்விட்டமை அக்கிராம மக்களின் துரதிஸ்டமே ஆகும். இவரது எண்ணங்கள் ஈடேற இவரது நண்பர்களும் குடும்பத்தினரும் தங்களாலான பங்களிப்பை வழங்குவது பொருத்தமாகும். இவரது ஆன்மா இறைவன் பாதங்களில் அமைதி பெற பிரார்த்திப்பதோடு இவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் இவ்விழப்பை தாங்கிக் கொள்ளும் சக்தியை அளிக்கவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்திக்கின்றோம்.

க.நா.சபாரத்தினம்

பொது முகாமையாளர்

பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

பண்டத்தரிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணா கருணா

அண்ணா! அண்ணா! அண்ணா!

எங்கள் ஆசை கருணா. அண்ணா

அன்பின் அகரம் நீ

அறிவின் தேடல் நீ

இளைஞனின் தோழன் நீ

சூழ்ச்சியின் பெரு முடிச்சு நீ

அதை அவிழ்த்திடும் விண்ணன் நீ

நியாயத்தின் துணைவன் நீ

அநீதிகளை எதிர்ப்பவன் நீ

சேவைக்கு முன்நிற்பவன் நீ

எங்கள் ஊரின் விடிவெள்ளி நீ......

புன்னகை புரியும் மழலை முகம் கொண்ட எமது சனசமூக நிலைய முந்நாள் தலைவர் கருணா அண்ணா திடீரென்று எம்மை விட்டு சென்று, எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தி விட்டீர். உங்களைப் போன்ற ஒருவர் இனி எப்போது தோழ்கொடுக்கப் போகிறாரோ தெரியவில்லை.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

நிர்வாக சபை

சங்கானை மேற்கு சனசமூக நிலையம்

வடலியடைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்த் துளிகள்

வடலியடைப்பை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர்.நடராசா கருணாகரன்

(முன்னாள் தலைவர் சங்கானை மேற்கு சனசமூக நிலையம் - வடலியடைப்பு)



மலர்வு 10 . 11 . 1952

உதிர்வு 08 . 08 . 2013

உள்ளம் உடைந்திட்டு இருவிழி பெருக்கெடுக்க
நாம் எல்லோரும் கதறியழ
இறைவனடி சென்றிட்ட கருணா அண்ணாவே
வடலியூரின் முன்னேற்றத்தில் பெரும் பங்காற்றினாய்
பொதுக்கூட்டம் என்றால் முன்நிற்பாய்
பெரும் சற்சை போல் கூடுவாய் அவர்கள்
வாயால் ஒரு முழவைக்காண்பாய்
இளையவர்களுக்கு முன்மாதிரியாய் நின்று பின்நின்று
வழிகாட்டிய எங்கள் அண்ணனே
நாங்கள் எப்போதும் உங்களை மறவோம்
வாசிகசாலை கூட்டம் வரும் போது எல்லாம்
ஒரு மூலையில் நின்று பேசுவது போல்
தெரியும் அந்த இடத்தை உங்களுக்காய் எப்போதுமே
ஒதுக்குகின்றோம் நாம்.

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய**
**இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

அன்னாரின் பிரிவில் துயர் பகிரும்
சங்கானை மேற்கு சனசமூக நிலையம்
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| | |
|---|---|
| தோற்றம் | மறைவு |
| 10 | 08 |
| 11 | 08 |
| 1952 | 2013 |

## அமரர்
## நடராசா கருணாகரன்

பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்கு கூட்டுறவுச் சங்க
முன்னாள் பணிப்பாளர் சபை உறுப்பினரும்
வடலியடைப்பு கிளை - II கிளைக்குழு
உறுப்பினருமாய் விளங்கி
அளப்பரிய சேவையாற்றி
மீளாத் துயில் கொண்ட
அமரர். நடராசா கருணாகரன் அவர்களுக்கு
எமது இதயபூர்வமான
கண்ணீர் அஞ்சலி செலுத்துகின்றோம்.

**அன்னாரை இழந்து துயருறும் அவரது குடும்பத்தினர்க்கு**
**எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.**
**இறைவன் பதம் அவரது ஆன்மா சாந்தியடைவதாக.**

பிரிவுத் துயர் பகிரும்
**பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்க**
**பணிப்பாளர்களும், பணியாளர்களும்.**

**08. 08. 2013**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## நடராசா கருணாகரன்

(தொழில்நுட்ப உத்தியோகத்தர்-அதிசிறப்பு)

எமது பிரதேச செயலகத்தில் கடமையாற்றி நேற்று (08.08.2013) வியாழக்கிழமை சிவபதமடைந்த நடராசா கருணாகரன் அவர்களுக்கு எமது கண்ணீர்த் துளிகளை செலுத்தி அஞ்சலி செய்வதோடு அன்னாரைப் பிரிந்து துன்புற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அவர்களின் துன்பத்தில் நாமும் பங்கெடுக்கின்றோம்.

நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம், உடுவில்.

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.

(கி: 10796) (10.8.3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனிநபர் காணி தொடர்பிலான நடைமுறையை விளங்கிக் கொண்டு பிணக்குகளைக் குறைத்துக் கொள்வதற்கான வழிமுறைகள்

**உறுதி என்றால் என்ன?**

பொதுவாக உறுதி எனப்படுவது ஆதனக் கைமாற்றங்களினைச் செய்கின்ற ஒரு ஆவணமாகும். இந்தக் கைமாற்றங்கள் சீதனமாகவோ, நன்கொடையாகவோ, அறுதி விற்பனையாகவோ அமையலாம். இது மட்டுமல்லாமல் தனக்குத்தானே ஆதனங்களை வெளிப்படுத்துவது, உறுதிப்படுத்துவது அல்லது உரிமையைக கைதிறப்பது, பிரிவிட்டுக் கொள்வது போன்ற விடயங்களையும் உள்ளடக்கும், உறுதி சாதனங்களை நிறைவேற்றுவதற்கு சட்டத்தினால் அங்கீகாரம் பெற்ற நபர் நொத்தாரிசு ஆவார்.

**உறுதி எழுதும் போது நாம் ஏன் மூன்று பிரதிகளில் கையெழுத்து வைக்கின்றோம்?**

- மூன்று பிரதிகளும் மூலப்பிரதி (ஒறிஜினல்), இணைப் பிரதி (டுப்ளிகற்), கைப்பிரதி (புறடகோல்) என அழைக்கப்படுகின்றன.
- மூலப்பிரதி என்பது காணி உரிமையாளருக்குச் சொந்தமானது. இது நொத்தாரிசினால் அல்லது காணி உரிமையாளரினால் காணிப்பதி வகத்தில் ஒப்படைத்துப் பதியப்பட்ட பின்பு ஒப்படைக்கப்பட்ட நபரிடம் திருப்பி வழங்கப்படும்.
- நொத்தாரிசினால் நிறைவேற்றப்பட்ட இணைப்பிரதிகள் குறித்த நொத்தாரிசு எந்த நீதிமன்ற வலயத்திற்குள் உறுதி எழுத அனுமதி பெற்று இருக்கின்றாரோ அந்த வலயத்திற்கான காணிப்பதிவகத்தில் ஒப் படைக்கப்பட்டு தனித்தனிப் பத்திரங்களாக பேணப்பட்டு உரியவர்களிற்கு தேவையான போது உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளாக வழங்கப்படும்.
- கைப்பிரதியானது நொத்தாரிசினால் பேணப்படுவதோடு அவரின் இறப்பின் பின்னர் காணி பதிவகத்திற்கு கையளிக்கப்படும்.

**காணியை பதிவு செய்வதற்கான முத்திரை வரி என்ன?**

உறுதியின் வகைக்கு ஏற்ப முத்திரை வரி வேறுபடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறுதி உறுதி (விலைக்கு விற்றல்)**

ரூபா 100,000 வரைக்கும் 3வீதம், பின்வரும் ஒவ்வொரு இலட்சத்திற்கும் –4 வீதம்

நீங்கள் ரூபா 250,000 பெறுமதியான காணியை அறுதி விற்கும் போது ரூபா 9,000 இனை முத்திரை வரியாக செலுத்த வேண்டி இருக்கும்.

**நன்கொடை உறுதி, சீதன உறுதி (நன்கொடையாக அல்லது சீதனமாக உறவினர்களுக்கு மாற்றுதல்)**

ரூபா 50,000 வரைக்கும் 3 வீதம், மிகுதி தொகைக்கு 2 வீதம்

நீங்கள் ரூபா 50,000 பெறுமதியான காணியை நன்கொடையாக அல்லது சீதன உறுதியாக மாற்றும் போது ரூபா 10,500 இனை முத்திரை வரியாக செலுத்த வேண்டி இருக்கும்.

**ஆட்சியுறுதி, வெளிப்படுத்தல் உறுதி, விளம்பல் உறுதி, உறுதிப்படுத்தல் உறுதி, உரிமைக்கைதிறப்பு**

வரையறுக்கப்பட்ட நிரந்தர முத்திரை வரியாக ரூபா 100இனைச் செலுத்த வேண்டும். மூலப்பிரதியானது 12.5 ரூபா முத்திரையினைக் கொண்டிருக்க வேண்டும்.

**குத்தகை, வாடகை உறுதி**

ஆதனத்தின் பெறுமதிக்கமைய ஒவ்வொரு ரூபா 1000க்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ.10 வீதம் (மாதாந்த வாடகை 5000 ரூபாக்கு உட்பட்டிருப்பின் முத்திரை வரிவிலக்கப்பட்டுள்ளது)

**ஈடு**

ஆதனத்தின் பெறுமதிக்கமைய ஒவ்வொரு ரூபா1000 அல்லது அதன் பகுதிக்கு ரூ.1 வீதம்

**என்னுடைய காணி உறுதியை நானே கொண்டு சென்று பதியலாமா?**

ஆம்

**வேறு யார் யார் மூலமாகப் பதியலாம்?**

பிரசித்த நொத்தாரிசு அவர்கள் மூலமாகப் பதியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசித்த நொத்தாரிசு அவர்களால் அங்கீகாரம் பெற்ற ஒருவர் பதியலாம் (பிரசித்த நொத்தாரிசு தவிர்ந்த வேறு ஒருவரினால் உறுதிகள் காணித் திணைக்களத்தில் ஒப்படைக்கப்படும் போது அதனை உறுதிப்படுத்திய கடிதம் நொத்தாரிசினால் வழங்கப்பட வேண்டும்)

"பதிவிற்காக கையளிக்கப்படும் உறுதிகள் பரிசீலிக்கப்பட்ட பின் ஒரு வாரகாலத்தினுள் பதிவு செய்யப்பட்டு பதிவிற்காக கையளித்தவரிடம் காணிப் பதிவகத்தால் ஒப்படைக்கப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது. தபாலில் பெற விரும்பின் பதிவுத் தபாலுக்குரிய முத்திரைகள் ஒட்டிய சுயவிலாசமிடப்பட்ட உறை வழங்கப்பட வேண்டும்"

**நாம் ஏன் உரிய காலத்தில் காணியை பதிவு செய்ய வேண்டும்?**

சொத்தினை மாற்றும் போது உறுதி சம்பந்தமான மோசடிகளைத் தடுப்ப தற்கும், முன்னுரிமைப் பதிவின் மூலம் உரிமையை நிலைநாட்டுவதற்கும், சிவனேஸ்வரன் என்பவருடைய நடவடிக்கையின் ஊடாக விளங்கிக் கொள்வோம்.

சிவனேஸ்வரன் என்பவர் 1980ம் ஆண்டு தை மாதம் 10ம் திகதி பொன்னம்பலம் என்பவருக்கு அறுதி உறுதி மூலம் விற்றார். இவ் உறுதி யானது மாசி மாதம் 10ம் திகதி பதிவிற்காக அனுப்பப்பட்டது. சிவனேஸ்வரன் அதே காணியை 1980ம் ஆண்டு மாசிமாதம் 1ம் திகதி சுந்தரம் என்ற வேறொரு நபருக்கு மோசடியாக விற்றார். இவ் உறுதியானது மாசி மாதம் 5ம் திகதியே பதிவிற்கு அனுப்பப்பட்டு விட்டது.

இங்கு தை மாதம் 10ம் திகதி பொன்னம்பலம் என்பவருக்கு அறுதியாக விற்கப்பட்ட போதும் அவ் உறுதி மாசி 10ம் திகதியே பதிவிற்கு அனுப்பப் பட்டமையால் மாசி மாதம் 5ம் திகதி பதிவு செய்யப்பட்ட சுந்தரம் என்பவருடைய உறுதியே முன்னுரிமை பெறும்.

**எமது ஆதன கைமாற்றங்கள் பதியப்பட்டுள்ளதா என்பதனை எவ்வாறு உறுதிப்படுத்திக் கொள்வது?**

காணி பதிவகத்திற்கு சென்று விண்ணப்பத்தினை மேற்கொள்வதினூடாக (காணி பதிவேடு) அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதிவு செய்யப்பட்ட உறுதி தொலைந்துவிட்டதா?**

**என்னுடைய காணி உறுதி தொலைந்துவிட்டது எப்படி தேடி எடுப்பது?**

உங்களுடைய காணி உறுதியை நிறைவேற்றிய நொத்தாரிசின் பெயர், உறுதி எழுதப்பட்ட ஆண்டு, உறுதி இலக்கம் என்பவை தெரிந்திருப்பின் காணிப் பிரதிக்கான விண்ணப்பப்படிவத்தினை நிரப்பி காணி பதிவகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் பிரதியினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**என்னுடைய காணி உறுதி இலக்கம் தெரியாது. ஆனால் நொத்தாரிசின் பெயரும் உறுதி எழுதப்பட்ட ஆண்டும் தெரியும். இதனை வைத்து தேடுதல் செய்ய முடியுமா?**

ஆம்

நொத்தாரிசின் பெயரில் கோவையிடப்பட்டிருக்கும் இணைப்பிரதியில் குறித்த ஆண்டில் தேடுதல் செய்வதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

**எனது காணி தொடர்பிலான மேற்கூறப்பட்ட விபரம் எதுவுமே எனக்குத் தெரியாது எனின் பக்கத்து காணி உறுதியை வைத்து தேடுதல் செய்ய முடியுமா?**

பக்கத்து காணி உறுதியை வைத்து தேடுதல் செய்ய முடியும் என்ற கருத்து பொதுவாக நிலவுகின்றது. இருப்பினும் எல்லா சந்தர்ப்பங்களினும் இது பொருந்தாது. ஒரே காணியாக இருந்து பிரிந்து சென்ற காணியாக இருப்பின் பக்கத்து காணி உறுதியை வைத்து தேடுதல் செய்ய முடியும்.

இவற்றினை விட வேறு ஏதேனும் முறைகளில் உறுதியின் பிரதியைப் பெற முடியுமா?

ஆம்.

- உங்களுடைய காணி உறுதியை எழுதிய நொத்தாரிசு உயிருடன் இருந்தால், அவரை நாடி பிரதியைப் பெற்றுக் கொள்ளலாம்.
- அல்லது சோலை வரித் திணைக்களத்தில் உங்களுடைய உறுதி ஒப் படைக்கப்பட்டிருப்பின் அங்கு சென்று உங்களது உறுதியின் பிரதியைப் பெற்றுக் கொள்ளலாம்.
- அல்லது, உங்களது காணி வங்கியில் ஈடு வைக்கப்பட்டிருப்பின், அவர்களை நாடி பிரதியினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**இதுவரை கூறப்பட்ட எந்த வழியிலும் எனது உறுதியைப் பெற முடியவில்லை. காணித் திணைக்களத்திலும் எது உறுதி அழிந்துவிட்டது. அப்படியென்றால்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நான் எவ்வாறு என்னுடைய காணியின் உரித்தை வெளிப்படுத்துவது?**

வெளிப்படுத்தல் அல்லது உறுதிப்படுத்தல் உறுதியினை எழுதுவதன் மூலம்.

**வெளிப்படுத்தல் அல்லது உறுதிப்படுத்தல் உறுதி என்றால் என்ன?**

இது பொதுவாக காணியில் தனக்கிருக்கும் உரித்தினை வெளிப்படுத்துவதற்காக அல்லது உறுதிப்படுத்துவதற்காக எழுதப்படுவதாகும்.

**வெளிப்படுத்தல் அல்லது உறுதிப்படுத்தல்**

உறுதியினை எழுதினாலும் கூட சில நேரங்களில் மாநகரசபை, பிரதேசசபை போன்றவற்றில் வரி செலுத்துவதற்கான பெயர் மாற்றத்தினை ஏற்பதில்லை. அப்படியாயின் வலிதான வெளிப்படுத்தல் உறுதியை எவ்வாறு எழுத முடியும்?

பின்வரும் ஏதேனும் ஆதாரங்கள ள காட்டுவதனூடாக வலிதான தாக்கலாம்.

- சோலை வரி ஏட்டில் உங்கள து பெயர் இருப்பின் அதனை ஆதாரம் காட்டி எழுதலாம்.
- ஒரே காணியிலிருந்து பிரிந்து சென்ற காணியாக இருப்பின் பக்கத்துக் காணி தாய் உறுதி பதிவு இலக்கத்தினைக் கொண்டு பெற்ற இரு மடிப்பத்திரம் அல்லது ஆதன விபரத்தாள் மூலம் உங்களுடைய உரித்து நிரூபிக்கப்பட்டிருப்பின் அதனை ஆதாரம் காட்டி எழுதலாம்.
- பக்கத்துக்காணி உறுதியின் ஆதன இடாப்பில் எல்லை காட்டப்படும் பொழுது உங்களுடைய பெயரில் எல்லை குறிப்பிடப்பட்டிருப்பின் அதனை ஆதாரம் காட்டி எழுதலாம்.
- குறிப்பிடப்பட்ட காணியின் ஏக வாரிசு நீங்களாக இருப்பின் அதனை நிரூபிக்கக்கூடிய தந்தையின் திருமண மற்றும் பிறப்பு சான்றிதழ் மற்றும் உங்களது பிறப்பு சான்றித ் இலக்கங்களை ஆதாரப்படுத்தி வெளிப்படுத்தல் உறுதியினை ஆக்கிக் கொள்ளலாம்

**தேச வழமையின் கீழ் சொத்துக்க ் எவ்வாறு பிரிக்கப்படுகின்றது?**

யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட சுகந்தி 2000ம் ஆண்டு திருமணம் முடித்தாள். கடந்த 4 வருடங்களாக அவளுடைய கணவன் சித்தசுவாதீனமுற்று தெல்லிப்பளை மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். தனது பிள்ளைகளின் அன்றாட வாழ்விற்காக கஷ்ரப்பட்டு உழைத்துவரும் சுகந்தி சீதனக்காணியை விற்க விரும்புகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் கணவனின் சம்மதமின்றி அவளுடைய காணியை விற்க முடியாது எனக் கூறுகின்றனர். பிள்ளைகளின் கல்விக்காக கஷ்ரப்படும் சுகந்திரக்கு அவளுடைய காணியை விற்க ஏதேனும் வழி உண்டா?

பொதுவாக தேசவழமைக்கு உட்பட்ட பெண் திருமணம் நிலைத்திருக்கும் காலத்தில் கணவனின் சம்மதத்துடனேயே எந்த ஒரு உறுதி மாற்றத்தினையும் செய்ய முடியும். ஆயினும் மாவட்ட நீதிமன்றத்தின் சம்மதத்துடன் சுகந்தி தனது காணியை விற்கலாம்.

வேறு எத்தகைய சந்தர்ப்பங்களில் கணவனின் சம்மதம் இல்லாவிடினும், மாவட்ட நீதிமன்றத்தின் அனுமதியுடன் சொத்தினை மாற்ற முடியும்,

- அவள் கணவனால் கைவிடப்படும் போது,
- பரஸ்பர இணக்கத்தின் பேரில் அவள் தனது கணவனை விட்டுப் பிரிந்து வாழ்ந்துவரின்,
- நீதிமன்றத்தின் ஏதாவதொரு கட்டளையால் இரண்டு வருடங்களிற்கு மேற்பட்ட காலத்திற்கு அவளது கணவன் சிறையில் இருப்பின்,
- அவளது கணவன் ஒரு பைத்தியக்காரனாக அல்லது முட்டாளாக அல்லது அவன் எங்கு வாழ்ந்து வருகின்றான் என்பது தெரியாதவிடத்து,
- அவளது கணவன் நியாயமற்ற முறையில் சம்மதம் தர மறுத்திருப்பின்,
- மனைவியினதும், பிள்ளையினதும் நலனுக்காகக் கணவனின் சம்மதம் தேவையில்லை என்று தெரியுமிடத்து

**தேசவழமையின் கீழ் சொத்துக்கள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றது?**

முதுசம், சீதனம், தேடிய தேட்டம் என மூன்றாய் பிரிக்கப்படுகின்றது.


தேவசகாயம் தனது முதுசக் காணியினை எவருக்கும் எழுதி வைக்காது இறந்து விடுகின்றார். மனைவியும் 2 பிள்ளைகளும் வாழ்ந்து வருகின்றனர். அவருடைய காணி எவ்வாறு பிரிக்கப்படும்?

தேவசகாயத்தினுடைய காணியில் மனைவிக்கு எப்பங்கும் சென்றடையாது. 2 பிள்ளைகளிற்கும் சமபங்காக பிரிந்து செல்லும்.

முதுசச் சொத்தினை எழுதி வைக்காது ஒருவர் இறக்கும் போது அச்சொத்து எவ்வாறு பிரிக்கப்படும் என்பதனை கீழ்வரும் வரைபடம் மூலம் இலகுவாக விளங்கிக் கொள்வோம். **(சீதனச் சொத்தும் பின்வரும் முறையிலேயே பிரிக்கப்படும்.)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**பாமினியும் சுந்தரும் 10 இலட்சம் பெறுமதியான காணியினை திருமணத்தின் பின்னர் வாங்கினர். சுந்தர் சொத்தினை எழுதி வைக்காது இறந்து விடுகின்றார். இவர்களுடைய சொத்து மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் எவ்வாறு பகிரப்படும்?**

திருமணத்தின் பின்பு கணவன் மற்றும் மனைவியினால் சேர்க்கப்பட்ட சொத்துக்கள் தேடிய தேட்டம் என்று அழைக்கப்படு கின்றன. இங்கு 7.5 இலட்சம் பெறுமதியான சொத்துக்கள் மனைவிக்கும், எஞ்சிய 2.5 இலட்சம் பெறுமதியான சொத்துக்கள் பிள்ளைகள் இருவருக்குமிடையில் சமனாகப் பிரிக்கப்படும்.

தேடிய தேட்ட சொத்தினை எழுதி வைக்காது ஒருவர் இறக்கும் போது அவருடைய சொத்து பகிரப்படும் முறையினை கீழ்வரும் வரைபடம் மூலம் இலகுவாக விளங்கிக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**காணி தொடர்பிலான பிணக்குகளிற்கு எவ்வாறு தீர்வினைப் பெற முடியும்?**

- எமக்கிடையில் சுமுகமாகப் பேசித் தீர்த்துக் கொள்வதினூடாகப் பிரச்சினைக்கான தீர்வினை இலகுவான முறையில் நேரடி விரய மின்றிப் பணச் செலவின்றி பெற்றுக் கொள்ள முடியும்.


- எமக்கிடையில் சுமுகமான முறையில் தீர்த்துக் கொள்ள முடியாத பட்சத்தில் எமது பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் மத்தியஸ்த சபைகளை நாடி செல்வதினூடாக பணச் செலவின்றி எமது பிணக்குகளிற்கான தீர்வினைப் பெற முடியும்.

- மத்தியஸ்த சபைகளை நாடியும் எமது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியவில்லை எனின் மத்தியஸ்த சபைகளினால் வழங் கப்படும் இணக்கப்படாமை சான்றிதழினைப் பெற்றுக் கொண்டு மாவட்ட நீதிமன்றில் வழக்கினைத் தாக்கல் செய்யலாம். பெறுமதி கூடிய வழக்கு எனின் மத்தியஸ்த சபைகளை நாடாமல் நேரடியாக மாவட்ட நீதிமன்றில் வழக்கினைத் தாக்கல் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நன்றி நவிலல்

எங்கள் குடும்ப விளக்கான அமரர் நடராசா கருணாகரன் அவர்கள் காலமான செய்தி கேட்டு உடன் ஓடோடி வந்து உற்ற நல்லுதவிகள் நல்கிய உற்றார், உறவினர், அயலவர், நண்பர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும், தொலைபேசி மூலமும், மின் அஞ்சல் மூலமும் (e.mail), முகப்பு பேசி மூலமும் (Face book) ஆறுதல் கூறிய அன்பர்களுக்கும், கனடாவில் வாழும் எமது கிராம மக்கள் "வடலியடைப்பு" என்னும் இணையத்தளத்தில் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும், மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கும், இரங்கல் உரை நிகழ்த்தியவர்களுக்கும், நோயுற்ற வேளையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட போது அங்கு கடமையாற்றிய வைத்திய நிபுணர், வைத்தியர், தாதியர்கள், எனைய ஊழியர்கள் அனைவருக்கும் "கருணாலயம்" என்னும் நினைவு மலர் வெளியீடு செய்த அச்சகத்தினருக்கும், மற்றும் பல வகையில் உதவி புரிந்தவர்களுக்கும், எமது இதயம் கலந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

07.09.2013

இங்கனம்

குடும்பத்தினர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய்
அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாவதற்கு,
எதை நீ எடுத்துக்கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை நீ கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகின்றது.
மற்றொருநாள்
அது வேறொருவருடையதாகின்றது
இதுவே உலகநியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.



[illegible] TP:-0777164613

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org